1982 ஏப்ரல் 11]

3,633 பேர் பயிற்சி பெற்றிருப்பதாகவும், 9 தலைமையிடங்களில்பயிற்சி கொடுக்கப்படுவதாகவும் அமைச்சர் சொன்னார். இது எங்கெங்கு உள்ளது? இந்தப் பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் கொடுக்கப்படுகின்றதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, 40 இடங்களில் பயிற்சி கொடுக்கப்படுகின்றது. அது நீண்ட பட்டியல். இருந்தாலும் 9 மாவட்ட தலைமை மருத்துவ மனைகளை மட்டும் சொல்கிறேன். திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல், வேலூர், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், காஞ்சிபுரம், நாகர்கோயில் ஆகிய 9 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அடுத்து அவர்களின் வேலைக்கு உத்தரவாதம் பற்றிக் கேட்டார்கள். இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் நமக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு இவர்கள் இல்லை. ஆகவே அத்தனை பேருக்கும் வேலை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள தொழுநோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை.

*வினா எண். 713.—டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் எவ்வளவு ?

(ஆ) அவைகளை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழு நோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை 320 ஆகும்.

(ஆ) இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளாக தமிழகத்திலே தொழுநோய் அதிகம் பரவியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. பரிசோதித்துப் பார்த்ததிலும், சிகிச்சை அளித்ததிலும் அதிலே நல்ல முன்னேற்றத்தை அரசு கண்டுள்ளது. பல மருந்துகளை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1982 ஏப்ரல் 1

ஒரே தடவையாகக் கொடுக்கும் முறையில், அந்தப் புதிய முறையைக் கடைப்பிடிக்கும் முறை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாக இந்தத் தொழுநோயைப் பொறுத்தவரையில், 'பிரிவலென்ஸ் ஆப் லெப்ரசி' என்ற அடிப்படையில் 1975-76 ஆம் ஆண்டில் 1,000-க்கு 20 பேர்கள் என்றிருந்தது. இப்போது அது 14.3 ஆக, சென்ற 5, 6 ஆண்டுகளில் மிக நல்ல வகையில் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே முன்னேற்றம் காணுகிறோம், அதோடு, இதற்காகப் பல மருந்துகளைக் கொடுக்கும் முறை இருக்கிறதா என்று கேட்டார்கள். இப்போது நாம் தனியாக ஒவ்வொரு மாவட்டத்திலே மட்டும், 'மல்டி டிரக்ஸ்' அதாவது 3,4 மருந்துகளைச் சேர்த்து Rifamycin+Lamp ene+D.D.S. once a month-3 a week-Daily. என்ற அடிப்படையில் ஒரு நபருக்கு ஆண்டுக்கு ரூ. 427 செலவிலே நாம் செய்து கொண்டு வருகின்றோம். இந்த முறையிலே நல்ல வகையிலே இன்னும் தீவிர முன்னேற்றம் காண முடியும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதி நிலை அறிக்கையில், சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களுக்குத் தொழுநோய் பரவாமல் தடுக்கின்ற அடிப்படையிலே, அவர்களைப் பரிசோதனை செய்யும் திட்டத்தின் அடிப்படையிலே, தொழுநோய் இருந்தால் கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும் வகையிலே, அனைத்து வட்ட தாலுகா மருத்துவமனைகளிலே, தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தும் திட்டம் இல்லை. நான் ஏற்கனவே, தமிழ்நாட்டில் 320 தொழுநோய் சிகிச்சை நிலையங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல, இப்போது மாணவர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டமாக, அங்கே எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள், 10 ஆம் வகுப்பு உள்பட என்பதைக் கணக்கிட்டு, சராசரி ஒரு பெரிய மாவட்டத்தில் 5, 6 இலட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள். அதிலே, ஏறத்தாழ 80 சதவிகிதமாவது நாம் உடனடியாக இந்த ஆண்டுக்குள் பரிசோதனை செய்து பார்க்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே தீவிரமான

1982 ஏப்ரல் 1]

முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில், பல மாவட்டங்களிலே ஆராய்ந்து பார்த்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக டீ.டீ.எஸ். கொடுத்துவிட்டால், 6 மாதங்களுக்குள், ஒரு வருஷத்திற்குள் குணமடைவார்கள். மாணவர்களுக்கு அந்த வ்யாதி இருக்கிறதா என்பதைக் கண்டு பிடித்து, அதிலே நல்லவகையிலே முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய் கண்டுபிடிக்கும் பணி நடைபெறுகின்ற முறையில் யூனிட்டுகள் அமைக்கப்படுகின்றது என்பதையும், முதல் காலகட்டத்தில் 'இன்டென்சிவ் பிரவலன்ஸ் ஏரியா' அந்த வட்டாரங்களில் தொடங்கி விட்டு, நாளாவட்டத்திலே அது 'நான்-இன்டென்சிவ் பிரவலன்ஸ்' ஏரியாக்களிலே அது விரிவடைகின்ற காரணத்தினால், எல்லா இடங்களிலும் சேர்த்து கணக்கிட்டுப்பார்த்தால், 1,000-க்கு 20 என்பது, 14 ஆகக் குறைந்திருக்கும். ஆனால், முதலிலே அதே வட்டாரத்தில் உள்ள புள்ளி விவரத்தைத் தனியாகப் பார்த்தால், 1,000-க்கு 20 என்று இருக்காது; 19 ஆகக் குறைந்திருக்கலாம் அல்லது அதுகூட இல்லாமல் இருக்கலாம். எனவே, சிகிச்சை முறையிலே 'பிரிவலன்ஸ்' குறைந்து விட்டது என்று சொல்லப்படுகின்ற ஒரு கருத்து, நடைபெற்ற முறையிலே எண்ணிப்பார்க்கிறபோது, அந்தக் கருத்து சரியல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? ஏற்கெனவே, ஆராய்ந்து பார்த்து, 'இன்டன்சிவ் பிரிவிலன்ஸ்' ஏரியாவிலே தொடங்கி, 'நான்-இன்டன்சிவ் பிரிவலன்ஸ்' ஏரியாவிலே உள்ளதைச் சேர்த்து, அந்தப் புள்ளி விவரம் தரப்படுகிறதே தவிர வேறல்ல என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருப்பதற்கு இடமில்லை. இண்டன்ஸிவாக ஜாஸ்தியாக எந்த மாவட்டத்திலே இருக்கிறதோ அந்த மாவட்டத்திலே நாம் ஜாஸ்தியாகக் கவனம் செலுத்துகிறோம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பியுள்ள கேள்வி, நாம் இன்டன்ஸிவ் முறையைக் கையாளுவதின் காரணமாக

ஒட்டுமொத்தமாக 1975ஆம் ஆண்டில் தமிழகத்திலே எத்தனை தொழுநோயாளிகள் என்று பார்த்தால் டோட்டல் பிரிவெலன்ஸ், சில மாவட்டங்களிலே 23, 24, என்றும், சில மாவட்டங்களிலே 27,28 என்றும், சில மாவட்டங்களிலே 16, 18 என்றும் ஆயிரத்திற்கு இருக்கிறது. தமிழகம் பூராவும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 1975 ஆம் ஆண்டு 20.3 ஆக இருந்தது. இப்போது 14.3 ஆக— ஹோல் ஸ்டேட், ஸ்டேட் வைடாகப் பார்த்தால்— குறைந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் தர்மபுரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 20 ஆக இருந்தது இப்போது 10 ஆக இருக்கிறது. டோட்டலாக கணக்குப்போட்டு பார்க்கிற நேரத்திலே எத்தனை நோயாளிகள் என்று எல்லாம் மானியக் கோரிக்கை விவாதம் வந்த போது நான் புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறேன்.

தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கை.

*வினா எண் 714.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை ?

(ஆ) தனியார் வசம் உள்ள வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1,198 வழித்தடங்கள்.

(ஆ) 3,771 வழித்தடங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த அரசு தேசியமாக்கிய பிறகு எத்தனை வழித்தடங்களில் எத்தனை மைல்கள் அரசு பேருந்துகளை விட்டிருக்கிறது ? தேசியமயமாக்குவதிலே இந்த அரசின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எத்தனை மைல்கள் என்ற கணக்கு இல்லை. அரசாங்கத்தினுடைய அடுத்த நிலை என்ன என்று கேட்டார்கள். தேசியமயமாக்கவேண்டுமென்பது இந்த அரசினுடைய கொள்கை. படிப்படியாக அதைச் செய்துகொண்டிருக்கிறோம். இதிலே முதல் நிலை, இரண்டாவது நிலை என்று இல்லை. படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறோம்.